**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 14–ம் தேதி**

**2026– ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை**

**IA No.9/2026**
**in**
**OS no.23/2019**

---

தெய்வேந்திரன் ......மனுதாரர்/3–ம்பிரதிவாதி

**/எதிர்/**

விஜயகிருஷ்ணன் .....1–ம் எதிர்மனுதாரர்/வாதி

**/எதிர்/**

1. துணைப்பதிவாளர்
   கூட்டுறவு பால்வள சங்கங்கள்
   மானாமதுரை ......2 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/ 1, 2, 4 முதல் 12 பிரதிவாதிகள்
2. பத்மாவதி
3. பொன்னுச்சாமி
4. மதயானை (இறப்பு)
5. மாவட்ட வருவாய் அலுவலர் சிவகங்கை
6. சார்பதிவாளர் திருப்புவனம்

7.M.S.285 பூவந்தி பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவு சங்கம், அதன் தலைவர்
தெய்வேந்திரன் மூலமாக
8.சித்ரா
9.இருளாயி
10.நர்த்தனா
11.அர்ஜீன்ராஜா

இம்மனு என் முன்பாக 23.02.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/3–ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேஷன் அவர்கள் ஆஜராகியும் 1–ம்எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு 1, 2 ம் சாட்சிகளை 3ம் பிதிவாதியை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.26 17:33:16 +0530

குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக வாதி தரப்பு 1, 2ம் சாட்சிகளை சமூகம் நீதிமன்றத்திற்கு மீண்டும் வரவழைக்க ஏதுவாக வாதி தரப்பு சாட்சியை (Reopen) செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/3-ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கில் இரு தரப்பிலும் கூடுதல் சாட்சி விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கில் வாதி தரப்பில் 1, 2-ம் சாட்சிகளை சமூகம் நீதிமன்றத்தில் முதல் விசாரணை செய்யப்பட்டு 3-ம் பிரதிவாதி தரப்பை தவிர மற்ற பிரதிவாதிகள் தரப்பில் இருந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சிகளை முடித்து வைக்கப்பட்டும் உள்ளார்கள் என்றும், அந்த நேரத்தில் மனுதாரர் தரப்பு வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்ததால் மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விபரத்தினை சொல்ல இயலவில்லை என்றும், அதனால், 1, 2-ம் வாதி தரப்பு சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், இதுவும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும், இந்த நிலையில் வாதி தரப்பு 1, 2-வது சாட்சிகளை 3-ம் பிரதிவாதி தரப்பில் இருந்து குறுக்கு விசாரணை செய்யாமல் வாதி தரப்பு சாட்சிகளை முடித்து வைக்கப்பட்டு, இரு தரப்பு வாதுரைக்காக வழக்கும் உள்ளது என்றும், தாவா வழக்கில் 3-ம் பிரதிவாதி தரப்பில் இருந்து, வாதி தரப்பு 1, 2-ம் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவேண்டியது அவசியமானதாக இருக்கிறது என்றும், அவ்விதம் வாதி தரப்பு 1, 2-ம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தால் மட்டுமே என் தரப்பு வழக்கை ருசுபடுத்த இயலும் என்றும், இல்லாது போனால் மனுதார்/3-ம் பிரதிவாதிக்கு தாங்கமுடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடியதாய் உள்ளது என்றும், எனவே மனுதார்/3-ம் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு 1, 2-ம் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக வாதி தரப்பு 1, 2-ம் சாட்சிகளை சமூகம் நீதிமன்றத்திற்கு மீண்டும் வரவழைக்க ஏதுவாக வாதி தரப்பு சாட்சியை மறுதிறப்பு செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் இருக்கிறது என்றும், எனவே, தாவா மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரையின் சுருக்கம்**

மனு அபிடவிட்டில் வழக்கின் நிலை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கும் 25.11.2025ம் தேதி முதல் வாதுரைக்காக மூன்று வாய்தாக்கள்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.26 17:33:22 +0530

ஏற்பட்டுள்ளது என்றும், அதனை மறைத்து கூடுதல் சாட்சிய விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருப்பதாக மனுப்பாரா 2ல் குறிப்பிட்டிருப்பதை வன்மையாக ஆட்சேபிக்கிறேன் என்றும், மேலும் மனுப்பாரா 2ல், வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறப்பட்டுள்ளது என்றும், ஆனால் மருத்துவ சிகிச்சை ஆவணங்கள் எதுவும் தாவா மனுவுடன் இணைக்கப்படவில்லை என்றும், இதன்மூலம் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ள காரணமும் பொய்யானதாகும் என்றும், தாவா வழக்கு ஆரம்ப கட்டமுதலே இந்த மனுதார் / 3ம் பிரதிவாதி உரிய காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜராவதும் இல்லை, எதிர்வழக்குரை தாக்கல் செய்யவுமில்லை என்றும், ஏற்கனவே 20.02.2018ம் தேதியன்று 3ம் பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் போய் Ex–parte செய்யப்பட்டது என்றும், அதனை Set aside செய்ய நான்கு வருடங்களுக்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த இந்த 3ம் பிரதிவாதியும் 19.04.2022ம்தேதி தான் 20.02.2018ம் தேதி ஏற்பட்ட Ex–parte உத்தரவை ரத்து செய்ய மனுச் செய்து அதுவும் திருப்பப்பட்ட பிறகு, அதை சரி செய்து உரிய காலத்தில் Represent செய்யாமல் போய் இரண்டு வருடம் கழித்து 2024 ல் தான் ஐ.ஏ.எண். 8/2024 ஆக காலதாமதத்தை மன்னிக்க கோரும் மனுவும், ஐ.ஏ.எண். 7/2024 ஆக Exparte Order Set aside மனுவும் நம்பரானது என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் ஐ.ஏ.எண். 7/2024 மற்றும் ஐ.ஏ.எண். 8/2024ல் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையில் ரிட்டன் செய்யப்பட்ட மேற்படி மனுவை இரண்டு வருடம் கழித்து காலம் கடந்து திரும்ப தாக்கல் செய்து அந்த காலதாமதத்தை மன்னிக்கக் கோரியும் மனுதார்/ 3ம் பிரதிவாதி மனுத் தாக்கல் செய்யாமல் அவரது குமாஸ்தா மூலம் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரத்தை எதிர்உரையில் தெளிவாக தெரிவித்திருத்ததாகவும், அதனை நீதிமன்றம் Cost உடன் அனுமதிக்கவில்லை என்றும், இருப்பினும் வழக்கு விசாரணை சீக்கிரம் நடந்தால் போதும் என்ற நல்ல எண்ணத்தில் விசாரணையை துவக்கி எதிர்மனுதாரரால் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், தெரிந்தும் குறுக்கு விசாரணை செய்யாமல், 3ம் பிரதிவாதியும், அவரது வழக்கறிஞரும் வேண்டுமென்றே இருந்து விட்டு, தற்போது நம்ப முடியாத காரணங்களைக் கூறி, உண்மை விபரங்களை மறைத்து தாவா மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், தாவா மனுவும் சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது என்றும், தாவா வழக்கு விசாரணை நடந்து, தாவா வழக்கில் முடிவு எட்டக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலேயே 2018 லிருந்து 2026 வரை கடந்த 8

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2026.02.26 17:33:27 +0530

வருடங்களாக 3ம் பிரதிவாதி தன்னை ஒருதலைபட்சமாக்கியதை ரத்து செய்ய உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வந்தும், அதன் பின்பு ரத்து செய்யப்பட்ட பிறகு, வழக்கில் ஆஜராகாமல் வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாமல் வேண்டுமென்றே காலதாமதப்படுத்துவதும், அதன்பின்பு சாட்சியை Recall செய்ய மனுச் செய்வதுமான வீண் காலதாமத நடவடிக்கையை தொடர்ந்து இந்த மனுதார்/3ம் பிரதிவாதி செய்து வந்துள்ளார் என்றும், அதனால் தாவா மனுவை அனுமதிக்க கடும் ஆட்சேபனை எதிர்மனுதாரரால் தெரிவிக்கப்படுகிறது என்றும், அதன்படி தாவா மனுவும் Gross abuse of the process of the Court என்ற சட்ட நிலைப்பாட்டின்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள தாவா Reopen மனுவும் சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தாவா Reopen மனுவை அனுமதிக்க தகுந்த முகாந்திரமும் இல்லை என்றும், ஆகவே மனுதாரரின் தாவா Reopen மனுவை எதிர்மனுதாரர் தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) மனுதாரர் இந்த நிர் மனுவை தனது தரப்பில் வாதி தரப்பு 1, 2 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வேண்டி வாதி தரப்பு சாட்சிகளை மீண்டும் வரவழைக்க ஏதுவாக வாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்திட வேண்டி தாக்கல் செய்துள்ளார். தாவா அசல் வழக்கானது இருதரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு வாதுரைக்காக போடப்பட்ட நிலையில் மனுதாரர் தனது மனு அபிடவிட்டில் இருதரப்பிலும் கூடுதல் சாட்சி விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், மனு அபிடவிட்டில் மனுதாரரின் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்துள்ளதாலும் அதனால் அவரது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு பற்றிய விபரத்தினை சொல்ல முடியாமல் போய்விட்டதாகவும், அதனால் வாதி தரப்பு 1, 2 சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முடியாமல் போய்விட்டதாகவும் இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும. எனவே வாதி தரப்பு 1, 2 சாட்சிகளை 3வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக வாதி தரப்பு 1, 2 சாட்சிகளை இந்நீதிமன்றத்திற்கு

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.26 17:33:34 +0530

மீண்டும் வரவழைக்க வேண்டியது அவசியமாக இருப்பதாகவும், எனவே வாதி தரப்பு சாட்சியத்தை மறுதிறப்பு செய்திட வேண்டி வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

6) மாறாக, எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் தாவா வழக்கும் கடந்த 25.11.2025 முதல் வாதுரைக்காக 3 வாய்தாக்களாக இருந்து வருவதாகவும், அதனை மறைத்து கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருப்பதாக மனு பாரா 2ல் குறிப்பிட்டிருப்பதை வன்மையாக ஆட்சேபித்திருப்பதாகவும் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறியுள்ள நிலையில் மருத்துவ சிகிச்சை ஆவணங்கள் எதுவும் தாவா மனுவுடன் இணைக்கப்படவில்லை என்றும், தாவா வழக்கு ஆரம்ப கட்ட முதலே மனுதாரர்/3ம் பிரதிவாதி உரிய காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், அதன் காரணமாக Exparte உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை ரத்து செய்ய 4 வருடங்களுக்கு மேலாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு கடந்த 19.04.2022ம் தேதியில் Exparte உத்தரவை ரத்து செய்ய மனு செய்த பிறகு அதுவும் திருப்பப்பட்ட பிறகு உரிய காலத்தில் மீண்டும் தாக்கல் செய்யாமல் இரண்டு வருடம் கழித்து காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமாய் மனு கொடுத்து மேற்படி திருப்பப்பட்ட மனுவை 2024ல் தாக்கல் செய்ததாகவும், மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்ட போதிலும் அதில் எவ்வித செலவுத்தொகை குறித்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றும், பின்னர் வழக்கு விசாரணை விரைந்து நடத்தாமல் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், குறுக்கு விசாரணை உரிய காலத்தில் செய்யாமல் தற்போது நம்பமுடியாத காரணங்களை கூறி உண்மை விபரங்களை மறைத்து தாவா மனு தாக்கல் செய்திருப்பதாகவும், தாவா மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியம் என்றும் வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

7) தாவா அசல் வழக்கும் நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வருகிறது தாவா அசல் வழக்கும் பல்வேறு கட்டங்களை கடந்து வாதுரைக்காக போடப்பட்டுள்ள சமயத்தில் இந்த Reopen மனு தாக்கல் செய்திருப்பதால் வழக்கு இறுதிநிலை எட்டுவதில் காலதாமதம் ஏற்படும் என்றாலும் மனுவை தள்ளுபடி செய்வதனால் பல்வேறு மேல்முறையீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருப்பதாலும் அதனால் ஏற்படும் காலவிரையமானது மிகவும் அதிகமாக கூடும் என்பதாலும், பல்வேறு சட்ட நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும் காலவிரையத்தை தவிர்க்கும் பொருட்டும் மனுதாரர் உரிய காலத்திற்குள் எவ்வித தாமதமும் இன்றி உடனடியாக

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.26 17:33:41 +0530

சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்து முடித்திட வேண்டும் என்று அறிவுறுத்தி மனு அனுமதிக்க வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8) **முடிவாக**, மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.1000/- செலவுத்தொகை எதிர்வரும் 11.03.2026ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க-12.03.2026

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் வருடம் பிப்ரவரி மாதம் 26-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.26 17:33:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.02.26 17:33:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்
IA No.9/2026 in OS no.23/2019
உத்தரவு
நாள்:26.02.2026